REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மைசூர் பால் பண்ணை வடநாடு மாற்றம்!

தற்போது பெங்களூரிலிருந்து வருகிற இந்திய பாக் பண்ணை ஆராய்ச்சி நிலையத்தின்—பால்பண்ணை பராமரிப்பு, பால் பண்ணை தொழில் நுணுக்கப் பிரிவுகள்—சிக்கிரத்தில், வடநாட்டில் உள்ள கார்னல் எனுமிடத்திற்கு மாற்றப்படும் என்று தெரிய வருகின்றது.

தேசிய பால் பண்ணை ஆராய்ச்சி நிலையம், கார்னலில் சுமார் ரூ. 2 கோடி செலவில், நிறுவப்பட முடிவு செய்திருப்பதை ஒட்டி, பெங்களூர் நிலையம் சீரழிக்கப்படுவதாகத் தெரிகின்றது.

மலர் 2] சென்னை: வைகாசி 17உ செவ்வாய் (31—5—55) ★ ★ வெளியீடு: வைகாசி 18உ புதன் (1—6—55) [இதழ் 299

'சேலத்து இரும்பைத் தோண்டி எடு'

'தொழிற்சாலைகள் பரவலாக நிறுவப்பட வேண்டும்!'

'ஒரே இடத்தில் குவிக்கப்படக் கூடாது!'

இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி கண்விழிப்பு

மங்களூர், மே 30—

"வர்த்தகம் பெருகவும், தொழில் வளர்ச்சியடையவும், தொழிற்சாலைகள், நாட்டின் பல பாகங்களிலும் பரவலாக ஏற்பட வேண்டும். சிற்சில இடங்களில் மாத்திரம் தொழிற்சாலைகள் குவிந்துவிடக் கூடாது."

—என்று, இந்திய இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி கூறியிருக்கிறார்.

'கானரா ஒர்க் ஷாப்ஸ்' என்ற நிறுவனத்தின் 'ஆட்டோ ஸ்பிரிங்' பகுதி ஒன்றை திறந்து வைத்துப் பேசியபோது, மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"நமக்கு அவசியமான சாமான்களையும், இயந்திர சாதனங்களையும், உறுப்புகளையும் இந்தியாவிலேயே நாம் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இது விஷயத்தில், நாம், நமது சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்."

ஹாங்காங்கில் 15 சீனர்கள் கைது

'காஷ்மீர் இளவரசி' நாசவேலையின் எதிரொலி

'காஷ்மீர் இளவரசி' வீழ்த்தப்பட்டது நாசவேலையினால் தான் என்று வெளியான அறிக்கையின் எதிரொலியாக 15 சீன அதிகாரிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும், பார்மோசாவிற்கு ஓடிவிட்டதாகக் கூறப்படுகிற இரு சீன அதிகாரிகளைத் திரும்ப ஹாங்காங்கிற்குக் கொண்டுவர முயற்சிக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

பம்பாய்-மாஸ்கோ இணைப்பு

ரேடியோ—டெலிபோன் ஏற்படும்

பம்பாய்க்கும்—ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவுக்கும் இடையே விரைவில் நேரடியான ரேடியோ டெலிபோன் இணைப்பு ஏற்படப் போவதாக அறியக் கிடக்கிறது.

பிரதமர் நேரு மாஸ்கோவிற்கு வருகை தரும் நேரத்தில் இந்தத் தொடர்பு வேலை செய்யத் துவங்கும் எனத் தெரியவருகிறது.

'நிலக்கரிப் பஞ்சத்தை நெய்வேலி போக்கிவிட்டது'

'வேறு பல தொழில்களையும் விரைவில் துவங்க வேண்டும்'

சென்னை இரும்பு வியாபாரிகள் தூக்கம் நீங்கினர்

சென்னை, மே 31—

கனரகத் தொழில்களில் சிலவற்றை இம்மாநிலத்தில் துவங்குவதற்கு, இந்தியப் பேரரசை சென்னை அரசாங்கம் வலியுறுத்த வேண்டும்.

"சென்னை மாநிலத்தில் உயர்ந்த இரும்புக் கனிப் பொருள் இருக்கிறது; நெய்வேலி பழுப்பு நிலக்கரி தென்னாட்டு தொழில் வளர்ச்சியில் ஒரு புதிய தொடக்கத்தைத் துவங்கி இருக்கிறது; எனவே, இங்கு ஒரு இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதில் எத்தவித கஷ்டத்திற்கும் இடமில்லாமல் செய்துவிட்டது."

—இக்கருத்தை, வி. 'அண்ணாமலை என்ற பிரபல சென்னை இரும்பு இரும்பு வியாபாரி குறிப்பிட்டுள்ளார்.

தென்னிந்திய இரும்பு வர்த்தகர்களின் 12-வது ஆண்டு விழா, சென்னை 'கந்தோவிக் சென்டரில்' நேற்று மாலை நடைபெற்றது.

அதற்கு தலைமை வகித்த வி. அண்ணாமலை என்ற இரும்பு வியாபாரி, சிறந்தசொற்பொழிவு ஒன்றை ஆற்றினார். அதில் அவர் கூறியுள்ளதாவது:—

"கட்டுப்பாட்டிலிருந்து விலக்கப்பட்டுள்ள இன்றியமையாத இரும்புப் பொருட்களுக்கு இங்கு பெரிய அளவில் முட்டுப்பாடு இருந்து வருகிறது. இப்பகுதியின் தேவையைத் தாராளமாக வழங்குவதற்காக 2,000 டன் எடைக்கு மேற்படி இரும்புப் பொருட்களை ஒதுக்கித்தர வேண்டும். அதுவுமன்றி, அதிகப்படியாக இரும்புப் பொருட்கள் இங்கு செலவழிக்கப்பட்டு வருவதால், சென்னையில் அதற்கென இரும்புப் பொருட்களைத் தேக்கி வைப்பதற்கு விரிவான முறையில் ஒரு கிடங்கு தேவைப்படுகிறது. உருக்கு இரும்பு ஆலோசனைக் குழுவில் இரும்பு வர்த்தகர்களுக்கு அதிகப்படியான பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும்."

பிரபல தொழிற் சங்கத் தலைவர் மறைவு

பம்பாய், மே 31—

பிரபல தொழிற் சங்க இயக்கத் தலைவர் என். எம். ஜோஷி தமது 73-வது வயதில் நேற்று மாலை 4 மணி அளவில் மாரடைப்பினால் காலமானார்.

வெளிவருகிறது!

ஜூன் திங்கள் இரண்டாம் கிழமை துவக்கத்தில், கடந்த மார்ச் திங்களில் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வு (எஸ். எஸ் எல். சி. பரீட்சை) முடிவுகள் வெளிவரும் எனத் தெரிய வருகின்றது.

'இந்தி நுழைப்பில் தீவிரம் கூடாது'

சேலம் நகராட்சி மன்றத்தாரின் முறையீடு

மவ்லங்கரின் பழைய பல்லவி!

இந்தி மொழியைக் கட்டாயமாக நுழைப்பதில் காட்டப்பட்டுவரும் தேவைப்படாத அவசரத்திலுள்ள ஆபத்தைக் குறித்து, சேலம் நகராட்சி மன்றத் தலைவர், தனது வரவேற்பு இதழில் குறிப்பிட்டிருந்தார். அப்போக்கால் [illegible] தென்னிந்தியர்களுக்கு ஏற்படும் கேடுகள், அவ்வரவே[illegible]ல் எடுத்துக் கூறப்பட்டிருந்ததுடன், முக்கியமான வி[illegible]தில் சகிப்புத் தன்மையும், நிதானப்போக்கும் கண்டிப்பா[illegible] மேற்கொள்ளப்படுவதுதான் வெற்றிதரும் வழியாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

மக்கள் சபைத் தலைவர் மவ்லங்கருக்கு, சேலம் நகராட்சி மன்றம் அளித்த வரவேற்பில் குறிப்பிட்டிருந்த மேற்குறித்த இந்தி மொழி பிரச்சினைக்கு, மவ்லங்கர் வழக்கம் போல் பழைய பல்லவியையே பாடினார்.

அவர் கூறியதாவது:—

"இந்தியைக் கட்டாயப்படுத்துவதில் தீவிரம் காட்டப்படுவதின் மூலம், தென்னாட்டை ஆதிக்கத்திற்குள்ளாக்க வடநாட்டினர் முயற்சிக்கின்றனர் எனக் கருதுவது தவறான கோள்கையாகும். மேற்கண்டவாறு கூறப்படுவதற்கு நேர் மாறாக, வடநாட்டில் தென்னாட்டினர்தான் அதிகப்படியான செல்வாக்குப் பெற்றுள்ளனர் என்பது என் சொந்தக் கருத்தாகும்."

"மத்திய அரசாங்கத்தில் தென்னாட்டைச் சேர்ந்த மந்திரிகள் முக்கியமான இலாகாக்களை நிர்வகித்து வருகின்றனர். எனவே, எந்த வகையிலாவது தெற்கு பாதகமடைந்திருக்கிறது எனக் கூறுவது தவறுடையதாகும்."

"இந்தி, அதிகப்படியான மக்களால் பேசப்படுகிறது. ஒரு காலத்தில் சமஸ்கிருதம் பொது மொழியாக இருந்த காரணத்தால், இந்திய மொழிகளில் மிகுதியாக சமஸ்கிருத சொற்கள் கலந்துள்ளன."

இந்த நேரத்தில் பார்வையாளராக வந்திருந்த ஒருவர், 'இந்தியாவின் பொது மொழியாக சமஸ்கிருதம் இருந்தது' என்ற கூற்றுக்கு ஆதாரம் காட்டும்படி மவ்லங்கரைக் கேட்டார்.

"எந்த உருவிலும் இந்தி நுழைக்கப்படக்கூடாது என முழுமூச்சாக எதிர்க்கும் எதிர்ப்பாளர்களுக்கு இணங்கி, இந்தியாவைப் பல சுதந்திர அரசுகளாகப் பிளப்பதற்கு அனுமதிக்கக்கூடாது. 'தமிழ் பேச

(4-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரம் கோரிய ஷேக் அப்துல்லா!

சிறை வைக்கப்பட்டிருப்பதற்கு பண்டித நேரு உடந்தை

பிரிட்டிஷ் பத்திரிகையின் குற்றச்சாட்டு

லண்டன், மே. 30—

"பிரதமர் நேருவின் இனிய மொழியை நம்புகிறவர்களுக்கு, ஷேக் அப்துல்லாவின் கதி ஒரு எச்சரிக்கையாகும்."

"ஜனநாயகத்திற்கு விரோதமாக, காஷ்மீர் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லா சிறை வைக்கப்பட்டிருப்பதற்கு இந்தியப் பிரதமர் நேருவும் உடந்தையா யிருக்கிறார்."

"பாகிஸ்தானுக்கு விரோதமாக ஒரு கருவியாக பண்டித நேரு ஷேக் அப்துல்லாவை உபயோகித்து வந்தார்; காஷ்மீருக்கு சுதந்திரம் வேண்டுமென அப்துல்லா கோரியதும், அவரைச் சிறையில் தள்ளினார்கள்."

—என்று, பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் பத்திரிகையான 'டெய்லி எக்ஸ்பிரஸ்' என்ற இதழ் குற்றஞ் சாட்டியுள்ளது.

'தமிழுக்கு துரோகியே! வெளியேறு'

மக்கள் சபைத் தலைவர் மவ்லங்கருக்குக் கருப்புக் கொடி வரிசை!

சேலம், மே. 30—

மக்கள் சபைத் தலைவர் மவ்லங்கர் சேலத்துக்கு வந்தார்.

ஏற்கனவே தீர்மானித்திருந்தபடி, அவருக்கு நகராட்சி மன்றம் அளிக்க இருந்த வரவேற்பைப் பெற, மன்றத்திற்குச் சென்றார். நகராட்சி மன்ற நுழைவு வாயிலில் திராவிட இயக்கத் தோழர்கள் வரிசையாக அணி வகுத்து நின்று, கருப்புக் கொடி ஏந்தி, 'இந்தி ஒழிக' 'தமிழுக்கு துரோகியே வெளியேறு' என அமைதியாக விண்ணதிர முழங்கமிட்டனர்.

கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தின் விளைவாக வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் ஏற்படாதிருக்க, போலீஸ் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

வரவேற்பைப் பெற்றுக் கொண்டதும், அதற்கு ஆங்கிலத்தில் பதில் கூற மவ்லங்கர் முனைந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க]

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 31—5—'55 செவ்வாய்

சென்னை சர்க்கார் கவனத்திற்கு......!

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கென சென்னை சர்க்கார் தயாரித்துள்ள திட்டங்களின் இலட்சிய எல்லையின் அளவு மிக மிகக் குறைவானது; இந்த மாநிலத்தின் நிர்ப்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அந்த அளவு போதுமானது அல்ல;

"பெரும் தொழில்களைப் பொறுத்தமட்டில் சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; சுதந்திரத்திற்குப் பிறகும்கூட சென்னை புறக்கணிக்கப்படுவது, வருந்தத்தக்கதாகும்.

"பெரும் தொழில்கள் நாட்டின் பல பாகங்களிலும் பரவலாக நிறுவப்பட வேண்டுவது மிக அத்தியாவசியமானதாகும்;

"தேவையான எல்லா மூலப் பொருள்களும் கிடைக்கும் இடத்தில்தான் ஒரு தொழில் துவங்க வேண்டுமென்பது வெறும் கட்டுக்கதை; அந்த எண்ணம் தவறானது என்பது ஜப்பானிலும், இதர தொழில் மயமான நாடுகளிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது."

என்று, சென்னை சர்க்கார், தொழில் திட்டம் பற்றி யோசனை கூற நியமித்த குழுவினரில் சிலர் குறிப்பிட்டிருக்கின்றனர்.

'தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது, வட நாட்டு ஆட்சியாளரால்' என்பதற்கு, வேறு எத்தனையோ எடுத்துக்காட்டுகளுக்குப் பிறகும், இந்தியப் பேரரசு திட்டி நிறைவேற்றி முடிக்குந்தருவாயிலிருக்கும் முதல் ஐந்தாண்டுத் திட்டம், அங்கை நெல்லிக்கனியாக, தெள்ளெனத் தெரிவதாயிருக்கிறது என்பதை நாம் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பிருந்தே எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்.

அன்று, நமது கண்டனக் குரலை பொருந்தாக் கூற்றெனக் கூறித் திரிந்தவர்கள் எல்லாம் நாளாவட்டத்தில், நாம் கூறியது உண்மைதான் என்பதை உணர்ந்து உரைத்து வருகின்றனர்.

டெல்லி ஆட்சிபீடம், தென்னாட்டினை—குறிப்பாக தமிழகத்தை தொழில் துறையில் உதாசீனப்படுத்திவருவதற்கு ஒரே காரணமெல்லாம், 'தென்னாட்டில் தொழில் வளம் ஏற்படக்கூடாது; தென்னாடு என்றென்றைக்கும் விவசாயக் காடாகவே இருந்தால்தான், வடநாட்டு உற்பத்திப்பொருள்களுக்கு தென்னாடு 'மார்க்கெட்'டாக இருக்க முடியும்' என்ற ஏகாதிபத்திய சுரண்டல் நோக்கத்தைத் தவிர வேறெதுவுமில்லை என்றும் நாம் பகிரங்கமாகவே குற்றம் சாட்டியிருக்கிறோம்.

இப்போது, நாம் வடநாட்டு ஆட்சியாளர்கள்மீது எந்தக் குற்றச்சாட்டுகளை சுமத்தினோமோ அந்தக் குற்றச்சாட்டுகளில் நியாயமிருக்கிறது என்று அதிகாரபூர்வமாக ஒப்புவதுபோல, சென்னை சர்க்கார் நியமித்த தொழில் திட்ட ஆலோசனைக் குழுவினர் தெரிவித்துள்ள கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் சென்னைக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்கவில்லை; இரண்டாவது திட்டத்திலேனும் உரிய பங்கு கிடைக்கும்,' என்று நம்புபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆனால், சுமார் ரூ. 6,200 கோடி செலவாகலாம் என மதிப்பிடப்பட்டிருக்கும் அத்திட்டத்தில், சென்னையின் பங்கு சுமார் ரூ. 300 கோடி பெறுமானதுதான் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இந்த ரூ. 300 கோடியிலும் பெரும் தொழில் வளர்ச்சிக்கென சென்னை சர்க்கார் 50 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே திட்டம் தயாரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இவற்றை எல்லாம் கவனித்தால், இரண்டாம் திட்டத்தாலும், தென்னாடு எந்தவித வளர்ச்சியையும் பெற முடியாது போய்விடுமோ என்ற அச்சம் பலருக்கு ஏற்படுவது நியாயமே!

"தொடர்ச்சியாக பல்லாண்டுகளாக தொழில் துறையில் உதாசீனம் செய்யப்பட்டு வரும் சென்னை மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு ரூ. 50 கோடி திட்டங்கள் போதுமானதல்ல," என்று சர்க்கார் குழுவினர் இடித்துரைத்திருக்கின்றார்கள்.

இந்த இடித்துரையையும், பரவலாக தொழில்கள் அமைய வேண்டியதின் அவசியம் பற்றியும் குழுவினரில் சிலர் தந்துள்ள கருத்துக்களை-சென்னை சர்க்கார் உண்மையிலேயே இந்த மாநில மக்களுக்கு நல்லது ஏதேனும் செய்ய வேண்டும் என்றெண்ணுபவர்கள் என்பதானால்—தங்களின் 'வட நாட்டு எஜமானர்'களுக்கு அறிவித்து, நியாயமாக சென்னைக்குக் கிடைக்கவேண்டிய பங்கினைப் பெற முற்படுவது அவசியமாகும்.

இந்த ஆலோசனைக் குழுவின் அறிக்கை இன்னும் சில தினங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை வெளிவந்ததும், மீண்டும் இப்பிரச்சினை பற்றி எழுதுவோம்.

புற்று நோய்க்கு புதுமை சிகிச்சை!

மார்பகத்தில் ஏற்படும் புற்று நோயை மின் அலை வாயுவான 'ரோடான்' கொண்டு சிகிச்சை செய்ய முடியும் என்பதை கிளாஸ்கோ டாக்டர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

மிகவும் முற்றிப்போன புற்று நோய்கூட இந்த சிகிச்சை மூலம் சீக்கிரம் குணமாகிவிடுகிறதாம்.

'தமிழர்கள் துணிவற்றவர்களாம்'

மத்திய மந்திரி தத்தார் கூற்று

கோவை, மே 31—

'தமிழ் நாட்டு மக்கள் துணிவுடையவர்களாக இருக்கவில்லை; பெண்களைப் பற்றி தமிழர்கள் கவலைப்படுவதாகவே தெரியவில்லை,"

என்று மத்திய உதவி உள்நாட்டு மந்திரி பி. என். தத்தார், காங்கிரஸ் ஊழியர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"மக்கள் சபை, சட்டசபை போன்றவை உட்பட பொது வாழ்வில் பெண்களுக்கு நிரம்ப சந்தர்ப்பம் தந்தாகவேண்டும்;

"இன்று வீட்டு நிர்வாகத்தை மேற்கொண்டிருக்கின்றனர், பெண்கள்; நாளை ஒருநாள், இந்தியாவின் உள்நாட்டு மந்திரியாக பெண் ஒருவர் விளங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்,"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பரிதாபம் காட்டி பரிதவித்தார்!

சப் - இன்ஸ்பெக்டரோருவர் பெற்ற விசித்திர அனுபவம்!

இரு சிறுவர்களுக்கு அனுதாபம் காட்டியதால் நகரியில் ஒரு ரயில்வே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு ஏற்பட்ட அனுபவம் வியக்கத்தக்கதாயுள்ளது.

சந்தேகத்திற்கிடமான நிலையில் இருந்த இரு சிறுவர்கள் ரயில்வே போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்; அங்கு அவர்கள் அழத் தொடங்கி விட்டனர்; விசாரித்தபோது தாங்கள் சென்ற இரு தினங்களாகச் சாப்பிடவில்லை என்றும், மிகவும் பசியாக இருப்பதாகவும் கூறினர்.

சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் மீது அனுதாபம் கொண்டு அவர்களை தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று அன்னமிட்டார்; சிறுவர்கள் தங்களுக்குத் தூக்கம் வருவதாகக் கூறியதால், அவர்களை ஓரிடத்தில் தூங்கச் சொல்லிவிட்டுத் தாமும் தூங்கப் போனார்; அவர் கண்விழித்தபோது, தம்முடைய பணப்பை, பௌண்டன் பேனா ஆகியவற்றுடன் அச்சிறுவர்கள் மறைந்துவிட்டதைக் கண்டார்.

தூத்துக்குடியில் முத்துக் குளிப்பு

ஆண்டு தோறும் நடைபெற வழி[illegible] ?

நிபுணர்கள் ப[illegible]னை செய்வர்

சென்னை, மே 31—

தூத்துக்குடி பிரதேசத்தில் நடைபெற்ற முத்துக் குளிப்பு வேலை முடிவடைந்துவிட்டது.

சுமார் மூன்று கோடி முத்துச் சிப்பிகள் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 37 இலட்சம் சிப்பிகள்தான் கிடைத்தன. இதில் சர்க்கார் பங்கு வருமானத்தின் மதிப்பு ரூ. 1,46,000.

இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை முத்துக் குளிப்பு நடத்துவதற்கு பதிலாக ஒவ்வொரு ஆண்டும் சங்குக்காக குளிப்பதுபோல் முத்துக் குளிப்பையும் நடத்தலாமா என்பதை நிபுணர்களைக் கொண்டு பரிசீலித்து சாத்தியமானால் ஒவ்வொரு ஆண்டும் அதை நடத்த முற்படவேண்டுமென்று விவசாய தொழில் இலாகா மந்திரி கூறினார்.

900 குழந்தைகள் வேதனையுற்றனர்

சீதபேதியை தடுப்பதற்காக 'ஊசி' போட்டுக்கொண்ட 900 டோக்கியோ பள்ளிக்குழந்தைகள் நோயுற்றிருப்பதாக டோக்கியோ சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனராம்.

ரஷ்யா வழியாக ஏற்றுமதி-இறக்குமதிக்கு ஏற்பாடு

ஆப்கன் சர்க்கார் ஒப்பந்தம் செய்துகொள்ளும்

பாகிஸ்தானுடன் தகராறின் எதிரொலி

பாகிஸ்தான் வழியாக ஏற்றுமதி செய்து வந்ததை ஆப்கன் சர்க்கார் நிறுத்திவிட்டதாகவும், கடந்த மே 10 முதல் கைபர் கணவாய் வழியாக ஆப்கனிஸ்தான் நடத்திவந்த இறக்குமதியும் நிலைநின்று விட்டதாகவும் கராச்சியில் உள்ள ஆப்கன் தூதுவராலய அதிகாரி கூறியிருக்கிறார்.

ஆப்கனிஸ்தான், ரஷ்யா வழியாக ஏற்றுமதி — இறக்குமதிக்கான ஒப்பந்தம் ஒன்றை விரைவிலேயே மேற்கொள்ளும் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

இந்த ஒப்பந்தம் பற்றிப் பேசுவதற்காக மாஸ்கோவிற்கு ஆப்கன் தூதுக் குழு ஒன்று ஏற்கனவே சென்றுள்ளதாம்.

பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலிக்கு, கராச்சியிலுள்ள ஆப்கன் தூதுவரான சர்தார் ரபீக், தாம் எழுதியுள்ள கடிதமொன்றில் பல லட்சம் ரூபாய் பெறுமான சாமான்கள் மடக்கிவைக்கப்பட்டிருப்பவற்றை, விடுவிக்குமாறு கோரியிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் ஆப்கன் தேசிய தினக் கொண்டாட்டத்தை ஒட்டி கராச்சியில் உள்ள ஆப்கன் தூதுவர் தந்த விருந்தில் பாக். அதிகாரிகள் கலந்துகொள்ளவில்லை என்றும் அந்த விருந்தில் சுமார் 300-பேர் கலந்து கொண்டனர் என்றும் அமெரிக்க, பிரெஞ்சு, பிரிட்டன் நாடுகளின் பிரதம தூதுவர் போன்ற அதிகாரிகளும்கூட கலந்துகொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானுக்கு வரவேண்டிய ஹைட்ரோ—மின்சார ஜவுளி இயந்திரங்களை, பெஷாவரில் பாகிஸ்தான் தடுத்து நிறுத்தியிருக்கிறதாம். ரூ. 50 லட்சம் விலையில், ஜெர்மனியிலிருந்து அந்த இயந்திரங்கள் தருவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

யுத்த காலத்தில் கைப்பற்றிய 11 டன் தங்கக்கட்டிகள்

பாரசீகத்திடம் ரஷ்யா திரும்பத் தரும்

இரண்டாம் உலக யுத்தத்தின் போது, பாரசீகத்திலிருந்து ரஷ்யா கைப்பற்றிய 11 டன் தங்கக் கட்டிகளை ஜுன் 1-ந் தேதி யன்று பாரசீகத்திடமே ரஷ்யா திரும்பத் தந்துவிடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பரில் இரு நாடுகளிடையேயும் இதற்கான ஒப்பந்தம் ஒன்று நிறைவேறியதாகக் கூறப்படுகிறது.

அந்த ஒப்பந்தப்படி ரஷ்யா இப்போது இருநாடுகளின் எல்லையோரத்தில் அந்தத் தங்கக் கட்டிகளைத் திரும்பத் தரும் என்று கூறப்படுகிறது.

மேலும் சுமார் 4.01 கோடி மதிப்புள்ள பொருள்களை ரஷ்யா பாரசீகத்திற்கு அனுப்பித் தரும் என்றும், இது 1941 முதல் 1946 வரை வடக்கு பாரசீகத்தை ரஷ்யா கைப்பற்றி ஆதிக்கத்தில் வைத்திருந்ததற்காக, பாரசீகம் கேட்டிருந்த யுத்த காலக் கோரிக்கைக்கு ஏற்ப தரப்படுவதாகவும் தெரியவருகிறது.

இருநாடுகளுக்கும் பொதுவாக இருக்கின்ற 720 மைல் பொது எல்லை பற்றி இருந்துவந்த தகராறு தீரவும் அந்த ஒப்பந்தத்தில் வழிவகை காணப்பட்டிருக்கிறதாம்.

தங்கக் கட்டிகளைப் பெறுவதற்காக, பொது எல்லைக்கு பாரசீக நாட்டுத் தூதுக்குழு தக்க பாதுகாப்புகளுடன் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

பாக்.-ஆப்கன் தகராறு முடிவுறுகிறது

கராச்சி, மே. 29—

பாகிஸ்தானுக்கும் — ஆப்கனிஸ்தானுக்குமிடையே எழுந்துள்ள தகராறுக்கு, தான் பிரரேபித்த பரிகாரத்தின் அடிப்படை அம்சங்கள் இரு நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன என்றும், விரைவிலே இரு நாடுகளும் சமரசமாகும் நிலை உருவாகிவிடும் என்றும் சமரச முயற்சியில் ஈடுபட்ட சவூதி அரேபிய இளவரசர் கூறியிருக்கிறார்.

கூடி வாழ்தல்!

பெல்கிரேட், மே 30—

சோவியத் தலைவர்களுக்கு, நடைபெற்ற விருந்தொன்றில், ஏராளமான யூகோஸ்லேவிய பத்திரிகையாளர்களும், இதர வெளிநாட்டுப் பத்திரிகையாளரும் வருகை தந்திருந்தனர்.

இதைக் கண்ணுற்ற மார்ஷல் டிட்டோ, சோவியத் கம்யூனிஸ்டு செயலாளர் நிகிதா குருஷ்சேவை நோக்கி, "பாருங்கள்; இங்கே எத்தனை பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள்; அவர்களில் பலர், மேற்கத்தி நாடுகளிலிருந்தும், கிழக்கு நாடுகளிலிருந்தும் வந்திருப்பவர்கள்; இதுதான் 'கூடி வாழ்தல்' என்பது," என்று கூறினாராம்.

விற்பனைக்கு வந்துள்ள விலையுயர்ந்த வைரம்!

அந்நிய நாட்டவர் வாங்கக் கூடுமென எதிர்பார்க்கின்றனர்

பல இலட்சக் கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ளதும், உலகிலேயே புகழ் பெற்றதுமான 'ஜோதி வைரம்' டாக்காவில் விற்பனைக்கு வந்துள்ளது. 400 ஆண்டுகட்கு முன்பு, பாரசீக மன்னர் அதை வைத்திருந்தாராம்; பின்னர், சீக்கிய மன்னர் ரஞ்சித் சிங்கிடம் அவ்வைரம் இருந்ததாம்; அதன் பின்னர், இப்போது அதை வைத்திருக்கும் டாக்காவிலுள்ள பிரபலமான முஸ்லிம் அரச குடும்பத்தினரின் கைக்கு அது மாறியதாகவும் கூறப்படுகிறது. அந்நிய நாட்டவர் எவரேனும் அவ்வைரத்தை வாங்குவதற்கு முன்வரக் கூடும் என்று அக்குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனராம்.

ஷேக் அப்துல்லா விடுதலையாவாரா ?

28-ந் தேதியன்று ஸ்ரீநகரில் நடைபெற்ற தேசீய மாநாட்டு ஊழியர் கூட்டத்தில், காஷ்மீர் ரெவினியூ அமைச்சர் ஜனுப் காசிம் கூறினார்:—

"ஷேக் அப்துல்லாவை விடுவிப்பதினால் காஷ்மீரத்தின் நலனும், அமைதியும் பாதிக்கப்படமாட்டாதென காஷ்மீர் சர்க்காருக்கு நன்கு தெரியும் வரையில், அவரை, சர்க்கார் விடுவிக்கமாட்டார்கள்; அவரை விடுதலை செய்வதா—இல்லையா என்பதைப் பற்றி முடிவு செய்யும் அதிகாரம் காஷ்மீர் சர்க்காருக்கே இருக்கிறது."

24 பெண் உறுப்பினர்கள்

பிரிட்டனிலுள்ள வாக்காளர்கள், காமன்ஸ் சபைக்கு, முன்பிருந்தவர்களைவிட 3 பேரை அதிகமாக—அதாவது, 24 பெண் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இவர்களில் 14 பேர் தொழிற் கட்சியினர்; 10 பேர் கன்சர்வேடிவ் கட்சியினர்.

நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்க புள்ளி விவரம் தேவையாம்!

விவசாய அபிவிருத்திக்கு ரூ. 660 கோடி ஒதுக்க வேண்டுமெனக் கோரிக்கை!

புதுடில்லியில் நடைபெற்ற விவசாயப் பொறுப்பாளர்கள் மாநாட்டில், நிலமற்ற விவசாயத் தொழிலாளருக்கு நிலம் தருவது பற்றிய பிரச்சினை பரிசிலனை செய்யப்பட்டபோது, ஒவ்வொரு மாநிலத்திலும் எத்தனை குடும்பங்களுக்கு விவசாய நிலம் அளிக்கப்பட வேண்டியுள்ளது—எவ்வளவு நிலம் கிடைக்கிறது—என்பதைப் போன்ற புள்ளி விவரங்கள் கிடைத்த பிறகுதான், நிலமற்ற விவசாயத் தொழிலாளருக்கு நிலம் தருவது போன்ற திட்டத்தைப் பூர்த்தி செய்யப்பட முடியும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சமுதாய அபிவிருத்தி தவிர்த்து, விவசாய அபிவிருத்திக்கு மட்டும் ரூ. 660 கோடி ஒதுக்கப்பட வேண்டுமென்று அம்மாநாடு சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தத் தொகை விவசாய உற்பத்திக்கு மட்டுமன்றி, கால்நடை வளம், மீன் வளர்ப்பு, சிறு நீர்ப்பாசனம், மண் வளப் பாதுகாப்பு, கிராமக் கடன் வசதி, கூட்டுறவுப் பண்டகசாலை அபிவிருத்திகளுக்காகவும் செலவிடப்படும்.

லண்டனிலிருந்து கல்கத்தா!

கார் மூலம் 12 தினங்களில் 8,240 மைல் கடந்தனர்

ஜெர்ரி ஜோவட் (வயது 32) என்பவரும், அவரது நண்பர் காலின் வில்சன் வார்டலும் (வயது 29) லண்டனிலிருந்து கல்கத்தாவிற்கு மோட்டார் மூலம் 12 தினங்களில் வந்தடைந்துள்ளனர். இந்த 8240 மைல் பிரயாணத்தை விசேடமாக மாற்றி அமைக்கப்பட்ட 'ஸ்டுடிபேக்கர்' காரில் மேற்கொண்டுள்ளனர்.

பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்டிரியா, யுகோஸ்லாவியா, கிரீஸ், துருக்கி, சிரியா, ஜோர்டான், ஈரான், பாகிஸ்தான் வழியாக இந்தியா வந்ததாகவும், தினத்திற்கு சராசரி 600 முதல் 800 மைல்கள் வரை பிரயாணம் செய்திருப்பதாகவும் ஜெர்ரி என்பவர் கூறியுள்ளார்.

இப்பிரயாணத்தை 10 தினங்களில் முடிக்கவேண்டுமென திட்டமிட்டிருந்ததாகவும், தெஹ்ரான் அருகே 'ரேடியேட்டர்' பழுதாகி விட்டதாலும், பழுது பார்க்க சரியான சாமான்கள் கிடைக்காததாலும் 36 மணி நேரம் தாமதமேற்பட்டதென்றும் சொன்னார்; பிரயாணத்தின்போது எந்தவிதத் தொல்லைகளும் ஏற்படவில்லை என்றார்.

பியயாணத்தின்போது 2 தினங்கள் மட்டுமே தான் சரியாக சாப்பிட்டதாகவும், மாற்றி மாற்றி காரை ஓட்டி வந்ததாகவும் தெரிவித்தார்.

உடல் எடையில் இருவரும் தலா 14 ராத்தல் இழந்துள்ளனர். ஜெர்ரி இந்தியாவில் ஒரு தொழில் நுணுக்க கம்பெனியில் வேலை பார்க்கிறார். இதற்கு முன் இதே தூரத்தை சுவிட்ஜர்லாந்து குழுவினர் $14\frac{1}{2}$ தினங்களில் கடந்து உள்ளர்.

வாலிப உழவரின் தீரமான செய்கை!

கிழவரைத் தாக்கிய புலியை கிறுகிறுக்கச் செய்தார்!

பாரி, (கார்வால்) மே 30—

டங்கிரி கிராமத்தில், ஒரு கிழவர், தனது வயலை உழுது கொண்டிருக்கையில், அவரைத் திடீரென ஒரு புலி தாக்க ஆரம்பித்தது. அக்கிழவரின் கூச்சலைக் கேட்ட ஒரு இளம் உழவர் கிழவரை மீட்கச் சென்று, புலியின் பின்னங்கால்கள் இரண்டையும் கெட்டியாகத் தனது கரங்களால் பற்றி புலியைக் கரகரவென்று கிழவரிடமிருந்து பின்னால் இழுக்க ஆரம்பித்தார். புலி, வாலிபரின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை.

கிழவரும், யுவரும் போட்ட கூச்சலையும், புலியின் உறுமலையும் கேட்ட கிராமவாசிகள் தடிகளுடன் ஓடிவந்து புலியைத் தடிகளால் அடித்துக் கொன்றனர்

புலி கொல்லப்படும் வரை அந்தத் தீரமுள்ள வாலிபர் அதன் பின்னங்கால்களைப் பிடித்த பிடியை விடவே இல்லை.

இந்தோனேஷிய இஸ்லாமிய இயக்கம்!

கிராமங்களை தாக்குகிறதாம்

6 கிராமவாசிகள் பலியானதாகத் தகவல்

ஜகார்தா, மே 28—

இந்தோனேஷியாவில் தீவிர இஸ்லாமிய ஆட்சி ஏற்பட வேண்டுமெனக் கோரிவரும் தாருல் இஸ்லாம் இயக்கத்தைச் சேர்ந்த இராணுவத்தினர், இங்கிருந்து சுமார் 50 மைல்களுக்கப்பால் உள்ள ஜியாங்பூர் பிரதேசத்தில் 200 வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினராம். மூன்று கிராமவாசிகள் கொல்லப்பட்டனர் என்றும், மற்றுமொரு இராணுவக் கூட்டத்தவர் வேறொரு கிராமத்தைத் தாக்கி மூவரைக் கொன்றனர் என்றும் கூறப்படுகிறது.

(தாருல் இஸ்லாம் இயக்கம், இந்தோனேஷியாவில் இஸ்லாமிய ஆட்சி ஏற்பட வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டது. இஸ்லாமிய இந்தோனேஷிய இராணுவம் அந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக விளங்கி வருகிறது.)

தீண்டாமை ஒழிப்புச் சட்டம்!

ஜூன் முதல் அமுல்

தீண்டாமையைக் கடைபிடிப்போருக்கும் தீண்டாமை நோக்குடன் மற்ற வகை அசௌகரியங்கள் விளைவிப்போருக்கும் 6 மாத சிறைவாசம் அல்லது ரூ. 500 அபராதம்-அல்லது இரண்டும் சேர்த்து தண்டனை தர அதிகாரமளிக்கிற—மக்கள் சபைக் கூட்டத்தில் நிறைவேறிய தீண்டாமை பற்றிய மசோதா ஜூன் 1-ந் தேதி முதல் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எஃகு உற்பத்தி: இந்தஆண்டில்குறைகிறது

இந்திய எஃகு உற்பத்தி இந்த ஆண்டில் சற்று குறையும் என்று கூறப்படுகிறது.

சென்ற ஆண்டுதான் இதுவரை எப்போதுமில்லாத அளவு 12,26,000 டன்னுக உற்பத்தி உயர்ந்தது என்றும், அந்த அளவைக் காட்டிலும் இந்த ஆண்டு உற்பத்தி குறைந்துவிடக் கூடும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

இதற்குக் காரணமே, நாட்டில் எஃகு உற்பத்தியின் அளவை அதிகரிப்பதற்காகத் தீட்டப்பட்ட விரிவாக்கும் திட்டங்கள் தான் என்று முரண்படக் கூறப்படுகிறது.

மே தின விழாப் பொதுக் கூட்டங்கள்

★

வால்பாறை

8—5—55 காலை 11 மணிக்கு வால்பாறை வட்டாரத் தி மு க. கிளைகள் சார்பில், மே தின விழாப் பொதுக் கூட்டம் காந்தி மைதானத்தில், தோழர் பி. என். இராமானுசம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் கழகக் கொடி ஏற்றிய பின் தோழர்கள் கோவை செழியன், கே. சண்முகம், இரா. பிச்சமுத்து சொற்பொழிவாற்றினர்.

* * *

அன்று மாலை 4 மணியளவில், பண்ணிமேடு எஸ்டேட் தி மு க. கிளை சார்பில், தொழிலாளர் விடுதி முன் மைதானத்தில் மே தின விழாக்கொண்டாட்டமும், பொதுக் கூட்டமும் தோழர் இராமசாமி தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் ஐயாப்பிள்ளை, கே. சண்முகம், இரா. பிச்சமுத்து, எஸ். அனந்தலை, பி. என். இராமானுசம் கோவை-செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கலையம்புத்தூர்

22—5—55 மாலை 7 மணி யளவில் தி. மு. கழகச் சார்பில், சாவடி முன்பு விழாப் பொதுக்கூட்டம், தோழர் வே சக்தியேந்திரன் தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். எஸ். இராமசாமி, மற்ற கட்சிகள் மே தினம் கொண்டாடுவதற்கும், தி. மு கழகம் கொண்டாடுவதற்கும் உள்ள வேறுபாடுகளை விவரித்துச் சொற்பொழிவாற்றினர்.

பழனி

20—5—55 மாலை 7 மணிக்கு பழனி இளைஞர் தி. மு. கழகச் சார்பில் தேரடி மைதானத்தில், விழாப் பொதுக் கூட்டம் தோழர் கே. கருப்பசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் காளியப்பன், பெருமான் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் தோழியர் அருண்மொழி அவர்கள் இன்றைய காங்கிரஸ் நிலை குறித்தும், தி. மு. கழகம் தொழிலாளருக்கு எந்த வகையில் பாடுபட்டு வருகிறது என்பது பற்றியும் விரிவுரை ஆற்றினர்.

ஆந்திராவின் தொழில் வளர்ச்சி

ரூ. 62 கோடி செலவில் 5 பெரும் திட்டங்கள்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறுமாம்

கர்நூல், மே 30—

ஆந்திர அரசாங்கம், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தன் பங்காக ரூ. 62 கோடிக்கு தொழிற் திட்டங்கள் வகுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சுமார் 2 இலட்சம் பேருக்கு வேலை தரக்கூடிய அந்தத் திட்டங்கள் ஆந்திரத் தொழில் துறையை வளர்ச்சியுறச் செய்யும் என்று கூறப்படுகிறது.

சர்க்கார் துறையில் 5 பெரும் தொழிற்சாலைகளும், தனியார் துறையில் பல தொழிற்சாலைகளும் துவங்கப்படுமாம்.

விசாகையிலுள்ள இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலையை விரிவாக்குதல்; விஜயவாடாவில் ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலை; விசாகை மாவட்டத்தில் ஒரு சோடா உப்புத் தொழிற்சாலை; கர்னூலில் ஒரு காகிதத் தொழிற்சாலை ஆகியவற்றை நிறுவுதல்; இராஜமகேந்திரபுரத்தில் உள்ள ஆந்திர காகிதத் தொழிற்சாலையை விரிவாக்குதல்—ஆகிய ஐந்து திட்டங்களும், சர்க்கார் துறையால் மேற்கொள்ளப்படுமாம்.

மாகிலத்தில் 4 சர்க்கரை ஆலைகள் துவக்குதல்; ராயலசீமையில் 4 துணி நெசவு ஆலைகளைத் துவக்குதல்—ஆகியவை, தனியார்—சர்க்கார் பங்கு பெறும் வகையில் துவங்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

இவையன்னியில், அங்கு தனியார் துறை முயற்சியாக வேறு பல பெரும் தொழிற்சாலைகளும் நிறுவப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றதாம்.

கிராமப்புறங்களில், இப்போது சுமார் 41,000 அஞ்சல் நிலயங்கள் இருக்கின்றன. நகர்ப் புறங்களில், இப்போது சுமார் 5,000 அஞ்சல் நிலயங்கள் இருக்கின்றன.

கொலாபா (கிளை) தி. மு. க. சொற்பயிற்சி மன்றம்

23-5-55 இரவு 9 மணிக்குகூப் ரேஜ் திடலில் சிறப்பு சொற்பொழிவுக் கூட்டம் தோழர் எஸ்.பி.பெருமாள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. சு. சேகரநதன், கே. கே. இராமநாதன், ஏ. எஸ். தாஸ் ஆகியோர், பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், தோழர்கள் இரா. சண்முகராசன், சு. தங்கவேலன் ஆகியோர் தி மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கியும், தற்கால அரசியல் நிலை குறித்தும் சிறப்புரையாற்றினர்.

முத்தமிழ் நாடக மன்றம்

25—5—55ல் பழைய பூவிருந்தவல்லியில் நிறுவப்பட்டது. மன்ற செயலாளராகத் திரு. பொ. பெருமாள், பொருளாளராக திரு. க. விசயரங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் முயற்சியாக 'ஒரே முத்தம்' என்ற நாடகத்தை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வேதாரணியம் சிந்தனை படிப்பகம்

இப்படிப்பகத்தின் பொதுக் குழுக் கூட்டம், 15—5—55ல், திரு. என் ஜி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றபோது, ஆண்டு விழாவை 12—6—55ல் நடத்துவதற்கு செயற்குழுவைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 18—5—55ல், செயற்குழுக் கூட்டம் திரு. எஸ். மணியம் தலைமையில் நடைபெற்றபோது, விழாவிற்குப் பல பிரமுகர்களை அழைப்பதென முடிவு செய்யப்பட்டது,

மலாட் தமிழர் முன்னேற்ற சங்கம்

24—5—55ல், சங்க முதலாண்டு விழா பட்டானிசால் தாருவாலா காம்பவுண்ட் திறந்தவெளி மேடையில் திரு. எம். துரைசாமி தலைமையில் நடைபெற்றது. திரு. எஸ். பி பிலிப்சாமுவேல் வரவேற்புரையாற்றினர்; தோழர்கள் உ. மு. முகம்மது உசேன், பி. அ. சி. சந்திரசேகன், கே. எம். பீர்முகம்மது, எம். ஏ. நடராசன், ந. சிவபாண்டியன் ஆகியோர் தமிழர் பண்பாடுகள் குறித்துப் பேசினர். பின்னர், பல கலா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தூத்துக்குடி திருவள்ளுவர் நாடகக் கலை மன்றம்

23—5—55ல், மன்ற உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஆர். எஸ். பாண்டியன் தலைமையில் நடைபெற்றபோது, தலைவராக எம். சங்கரலிங்கமும், துணைத் தலைவராக ஆர். எஸ். பாண்டியனும், செயலாளராக எஸ். சவரி முத்துவும், துணைச் செயலாளராக ஐ சுப்பையாவும், பொருள் காப்பாளராக வி மூக்கனும்; செயற்குழு உறுப்பினர்களாக ஆர். பி. கனி, எஸ். செல்லையா, பி. பிசசையா, பி. சார்லி, டி. என். சந்தர், டி. அல்போன்ஸ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், மன்ற வளர்ச்சிக்காக ஜூன் திங்கள் 19-ந் தேதி "போராட்டம்" என்னும் நாடகத்தை நடத்துவதெனவும், அதற்கென ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—14/55

பெங்களூர் மாவட்டம்

[அறிக்கை 10/55-ல் கண்ட விதிகளோடு கீழ்க்கண்ட விதிகளும் இயையுமாறு சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்]

பெங்களூர் மாவட்டத்திலுள்ள (கர்நாடகப் பகுதிகளில் உள்ள) கிளைகள் ஒவ்வொன்றும் மாவட்டக் கிளைக்கு இரண்டு இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தற்காலிகமாக அளிக்கப்படுகிறது.

பெங்களூர், வேறு அறிக்கை வரும்வரையில் சென்னையைப்போன்று ஒரு மாவட்டமாகக் கருதப்படும். கர்நாடகத்திலுள்ள எல்லாக் கிளைகளும் அந்த மாவட்டத்தில் இணைய அனுமதிக்கப்படுகின்றன.

பெங்களூர் மாவட்டம், பொதுக்குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இப்போதைக்கு அனுமதிக்கப்படுகிறது.

கிளைகள், பதிவுச் சீட்டுகளை, 'தி. மு. கழகம், பிளாக்பள்ளி (சிவாஜி நகர்), பெங்களூர்-1,' என்ற முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (முன்னரே தேர்தல் நடத்தியிருந்தாலும் கிளை உறுப்பினர்கள் மீண்டும் கூடி, முன்னைய முடிவை உறுதி செய்துகொண்டு இரண்டு மாவட்டப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும்)

பெங்களூர் மாவட்டச் சிற்றூர்-பேரூர்-வட்ட (Division)க் கிளைகள் 12—6—55 ஞாயிறன்று தேர்தல் விதி முறைப்படி தேர்தல் நடத்துமாக.

மாவட்டக் கிளைத் தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் பொதுச் செயலாளரால் அறிவிக்கப்படும்.

★

சித்தூர் மாவட்டம்

சித்தூர் மாவட்டத்திலுள்ள தி. மு. கழகக் கிளைகள், பெங்களூர் மாவட்டத்தைப் பொறுத்துச் சொல்லப்பட்டுள்ள விதி முறைகளைக் கடைப்பிடித்து மாவட்டக் கிளையை அமைக்குமாக.

மாவட்டக் கிளைத் தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

"அறிவகம்" சென்னை
28—5—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

****

பிரிட்டனில் தொழில்கள் பல பாதிக்கப்படுகின்றன

இரயில்வே வேலைநிறுத்தத்தின் எதிரொலி

லண்டன், மே 30—

70 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம், பிரிட்டிஷ் தொழில்களை பாதிக்க ஆரம்பித்துவிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

சுமார் 40,000 டன் இரும்பு, கிளாஸ்கோ உருக்குத் தொழிற்சாலைக்கு சேர்க்கப்படாமலேயே இரயில் நிலையத்தில் தேங்கிக் கிடப்பதாகவும், இன்னும் நான்கு தினங்களுக்குள் இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் முடிவுற்று, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பாவிட்டால் கிளாஸ்கோ இரும்புத் தொழிற்சாலை மூடப்பட வேண்டியிருக்குமென்றும், இதனால் 17,000 தொழிலாளர்கள் சோம்பிக்கிடக்க நேரிடும் என்றும் கூறப்படுகிறது.

இப்படி வேறு பல தொழில்களும் வெகுவாகப் பாதிக்கப்படலாமென்ற அச்சம் பலப்பட்டு வருகிறதாம்.

மீண்டும் தொழிலாளர்களுடன் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்த முயற்சிகள் நடைபெறுவதாயும் கூறப்படுகிறது.

நாடு முழுவதும், வேலை நிறுத்தத்தால் போக்குவரத்து எத்தனை தூரம் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதைச் சொல்லத் தேவை இல்லை.

அதிக சம்பளம் தந்து வசதிகளைப் பெற மாணவர்கள் முடிவு!

சென்னை, மே 30—

நாட்டு வைத்தியக் கல்லூரியில் நல்ல போதனா வசதி, நல்ல ஆசிரியர்கள், நல்ல சாதனங்கள் முதலியனவற்றை சர்க்கார் விரைவில் தரும் பொருட்டு, தாங்கள் படிப்புக்காக ஆண்டு தோறும் செலுத்தும் கட்டணத்துடன் ரூ 50 அதிகமாகத் தர மாணவர்களே முன்வந்திருக்கின்றனர் என்றும், தற்போது மாணவர்கள் ரூ. 150 சம்பளம் தருகின்றனரென்றும், இனி அவர்கள் ஆண்டுதோறும் ரூ 200 தருவார்கள் என்றும் தெரிய வருகிறது.

மாணவர்கள் அதிகச் சம்பளம் தர முன்வந்திருப்பதை சர்க்கார் ஏற்றுக்கொண்டு, தேவையான சீர்திருத்தங்களைச் செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனத் தெரிகிறது.

கவர்னரைக் காண உண்ணாவிரதம்!

வடநாட்டு வாலிபரின் பிடிவாதம்!

சென்னை கவர்னரான பிரகாசாவைக் காண வேண்டுமெனக் கோரி, ராகேஷ் என்ற ஒரு வடநாட்டுக்காரர் கடந்த 22-ந் தேதியிலிருந்து உண்ணாவிரதமிருந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

உடல்நிலை மோசமாகிவிட்டதால், பூக்கடை போலீசாரால் 27-ந் தேதி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவர், இன்னும் உண்ணாவிரதத்தைக் கைவிடவில்லை என்று கூறப்படுகிறது.

அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

★

ஜூன் 1: மாலை 6 மணிக்கு: (மன்னார்குடியடுத்த) உள்ளிக்கோட்டை தி. மு. க. பொதுக் கூட்டம்

2: மாலை 6 மணிக்கு: கீவளூர் (நாகை மார்க்கம்) தி.மு.க. பொதுக்கூட்டம்

3: மாலை 6 மணிக்கு: திருவாரூர்-தி.மு.க. பொதுக்கூட்டம்

4: இரவு: விழுப்புரம்: எம். ஜி. ஆர். மன்ற நாடகத்திற்குத் தலைமை

இந்நிகழ்ச்சிகளில் அண்ணா அவர்களுடன் தோழர் ஆ. பொ. அம்பலனூர் அவர்களும் கலந்து கொள்வார்.

இந்தி நுழைப்பில்....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

முடியவில்லையானால் தமிழ் நாட்டிற்கு வரக்கூடாது" எனக் குரலெழுப்பப்பட்டது."

"பாரத் முழுதும் ஒன்றேயாகும்; எனவே, தமிழ் நாட்டிற்கும் வர எனக்கு உரிமை உண்டு."

"இத்தகு மொழிப் பிரிவினை நிலவுமானால், ஒருவகையில் எந்நாளும்பொழுது, தென்னிந்தியனுக்கு எந்தவகையிலும் டில்லியில் இடம் இருக்கவே முடியாது."

தீர்க்கமான முடிவாம்!

சென்னை, மே 30—

"பி. சி. ஜி இயக்கத்தினர் என்ன சமாதானம் கூறியபோதிலும், இப்போதைய நிலையில், நம் நாட்டில் ஆரோக்கியமான குழந்தை களுக்குக்கூட 'பி. சி. ஜி' ஊசி போடுவது பாதகமானது அல்ல; இது எனது தீர்க்கமான முடிவாகும்," என்று, சி. இராசகோபாலாச்சாரியார் தெரிவித்திருக்கிறார்.

சீனாவில் சிறை வைக்கப்பட்டிருந்த அமெரிக்க விமானிகளில் நால்வர் விடுதலை

"செஞ்சீன சிறை வைத்திருக்கும் நான்கு அமெரிக்க விமானிகளை விடுதலை செய்யுமென்று அண்மையில் பீகிங் சென்று திரும்பிய வி. கே. கிருஷ்ணமேனன் அறிவித்திருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து அந்த நான்கு கைதிகளும் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவும், நீதிமன்ற உத்தரவுப்படி அவர்களை 'வெளியேற்றுவதாக'வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமெரிக்க விமானிகள், கொரிய யுத்தத்தின்போது சீனாவுக்குள் அத்துமீறி அழைத்து குண்டுடன் விசியதாகவும், ஆத்திர மூட்டக்கூடிய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டதாகவும், எனவே, அவர்களை உடனடியாக வெளியேற்றிவிட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாயும் செய்திகள் கூறுகின்றன.

மொத்தம் 13 அமெரிக்க விமானிகள் சீனாவில் சிறைவைக்கப்பட்டிருப்பதில் நான்கு பேர் மட்டும் இப்போது விடுவிக்கப்படுகின்றனர்.

இந்தியாவின் வேண்டுகோளின் பேரில், இவர்கள் விடுதலை செய்யப்பட்டிருப்பதாயும், இதற்கு—மேற்கு நாடுகளில் இருந்தவரும் கொரிய விடுதலைக்கு பெரியதோர் உதவியாக இருந்ததாக மேனனும், கிருஷணமேனன் சுருத்தறிவித்திருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

குறும்பூர்

மஜீத் திடலில்

1—6—55 இரவு 7 மணிக்கு

தலைவர்: கே. வி. கே. சாமி

பேசுபவர்:

ஈ. வெ. கி. சம்பத்

★

சேலம் (அம்மாப்பேட்டை)

காந்தி மைதானத்தில்

1—6—55 மாலை 6-30 மணிக்கு

தலைவர்: சி. முருகேசன்

பேசுவோர்:

எஸ் எஸ். தென்னரசு

ஈ. ஆர். கிருஷ்ணன்

சேலம் மாவட்ட தி. மு. கிளைக் கழகத் தோழர்கட்கு

★

"மாநில மாநாட்டு நிதிக்காக ஒவ்வொரு கிளைக் கழகத்திற்கும் நிர்ணயித்திருக்கும் தொகையைத் தவறாமல் இம்மாத இறுதிக்குள் பொருளாளர் முகவரிக்கு அனுப்பி வேண்டுமென்று எல்லாக் கிளைகளுக்கும் வேண்டுகோள் விடுத்தும், ஒன்றிரண்டு கிளைகள் தவிர மீதிக் கிளைகள் இதுவரை மாவட்டத்திற்கு அனுப்பவில்லை.

"ஏற்கனவே முடிவு செய்தபடி நமது மாவட்டத்தின் பங்குத் தொகையை உடனடியாகச் சேர்த்துவிட மாவட்டத்தைச் சேர்ந்த கிளை ஒவ்வொன்றும் தங்கள் பொறுப்பை நன்கு உணர்ந்து, தனி முயற்சி எடுத்து, தொகையை உடனடியாக 'தோழர் பி. எம். குப்புசாமி, பொருளாளர், மாவட்ட தி. மு. க., பெரியாண்ணஹள்ளி(அஞ்சல்) ஜோலார்பேட்டை ஆர். எம். எஸ். (வழி) சேலம் மாவட்டம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, சேலம் மாவட்ட மாநில மாநாட்டு நிதிக் குழு செயலாளர் தோழர் ப இராமலிங்கம் அறிவிக்கிறார்.

திருமணங்கள்

★

1—6—55 காலை 8½ மணிக்கு சேலம், அம்மாப்பேட்டையில், தோழர் டபிள்யூ. முருகன்—தோழியர் வேதஅன்பு திருமணம், தோழர் தேவநேயப்பாவணர் தலைமையிலும் தோழர் எஸ். எஸ். தென்னரசு முன்னிலையிலும் நடைபெறும்.

* * *

2—6—55 காலை 9 மணிக்கு, மேட்டுப்பாளையத்தில், தோழர் க. கருப்பையா—தோழியர் செல்லம்மாள் திருமணம், தோழர் எஸ் முத்து தலைமையில், மணமகன் இல்லத்தில் நடைபெறும். தோழர் சந்தானம் வாழ்த்துரை வழங்குவார்.

க. அறிவழகன்

சுற்றுப்பயணம்

ஜூன் 1: காலை: அண்ணாமலை நகர்; மாலை: கோடம்பாக்கம்

3: கல்லிடைக்குறிச்சி

5: கடலூர் (என். டி.)

7: வள்ளுவகுடி

8: மாயவரம்

கோவை செழியன்

சுற்றுப்பயணம்

ஜூன் 1: வடிவேலாயம்

3: குளேஸ்வரன்பட்டி (பொள்ளாச்சி)

4: ஆத்தூர் (சேலம்)

5: கடலூர்

கோவா போலீசாரின் வழக்கமான அடக்குமுறைத் தாண்டவம்

அறப்போர் வீரர் மீது பாய்ச்சல்

போரில் சேர மதுரையிலிருந்து தொண்டர்கள்

தலவாடி (கோவா எல்லை) மே 30—

விமாயி என்ற ம. சோ. கட்சியைச் சார்ந்தவரின் தலைமையில் இரண்டாவது பிரிவாகச் சென்ற கோவா விடுதலை அறப்போர் வீரர்களில் பலர், கோவா போலீசாரின் அடக்குமுறை வெறிச் செயலுக்கு ஆளானார்கள் என்று தெரிகிறது.

ஒரு பெண் உட்பட 15 பேர்களுக்கு மேல் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனராம்.

முதலில் 70 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களில் 65 பேர் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும், விமாயி உட்பட 6 பேர்கள் இன்னும் காவலில் உள்ளனர் என்றும் தகவல் கிடைத்திருக்கிறதாம்.

விடுதலை செய்யப்பட்ட பலர் சவந்தவாடி மருத்துவமனையில் அனுமதிக்கப் பெற்றிருக்கின்றனர் என்றும், சிலருக்கு 18 மணிநேரமாக பிரக்ஞையே இல்லை என்றும் கூறப்படுகிறது.

நாடு கடத்தப்பட்ட தம்பதிகள் விடுதலை

பம்பாய், மே 30—

சென்ற ஆண்டு, கோவா அதிகாரிகளால் லிஸ்பனுக்குக் கடத்தப்பட்ட டாக்டர் பண்டாலிக் செய்ட்டோன்டே யும், அவரது மனைவியும் போர்ச்சுக்கல் சர்க்காரால் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் எட்டியிருக்கிறது. டாக்டர் செய்ட்டோன்டே ஒரு விருந்துக் கூட்டத்தில் கோவா விடுதலை பற்றி பேசியதற்காக, சென்ற ஆண்டு பிப்ரவரியில் கோவா அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, லிஸ்பனுக்கு நாடு கடத்தப்பட்டார்.

அறப்போருக்குத் தொண்டர்கள்

மதுரை, மே 30—

கோவா அறப்போரில் கலந்து கொள்வதற்காக 15 பேரடங்கிய தொண்டர் குழாம் மதுரையிலிருந்து ஜூன் மாதம் 15-ந் தேதி புறப்படும் என்று தெரியவருகிறது.

'தமிழுக்கு..... ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கிலத்திற்குப் பதிலாக, தமிழில் பதிலளிக்குமாறு மன்ற உறுப்பினர் ஒருவர் கண்டிப்பாகக் கேட்டுக் கொண்டார்.

தமிழ் மொழியில் பேச இயலாமைக்கு மல்லகர் வருந்துவதாகக் கூறினார்.

"தமிழ் நாட்டிற்குள் நுழைவதற்கு முன் தமிழைக் கற்றுக் கொண்டு நுழையவேண்டும்,"

என, மேற்படி உறுப்பினர் எடுத்துக் கூறிவிட்டு, அவையை விட்டு வெளியேறினார்.

★

முழு விபரம்

29—5—55 காலை 3½ மணிக்கு, சேலம் நகர சபை வரவேற்பைப் பெற வந்த மல்லங்கருக்கு சேலம் நகர சபை சுயேச்சை உறுப்பினர்களான திரு எம். வி. சொக்கலிங்கம் (தி. க.), பி. கே. வரதராசலு (தி. மு. க.) தலைமையில் டாக்டர் கே. ஆர். கோபால் எம். சி., ஜி ராசப்பன் எம் சி., அம்மச்சி கவுண்டர் எம். சி., என். வரதன் எம் சி., ஏ. பெருமாள் எம். சி., மற்றும் ஆர். நாராயணசாமி, ஆர். அர்ச்சுனன் உள்பட சுமார் 500 பேர்கள் வரவேற்பில் காலையில் ஆங்கிலத்திற்குப் பதிலாக நின்றுகொண்டு கருப்புக் கொடி காட்டினர். அதுசமயம் மல்லங்கர் காரில் மறுப்பினால் "தமிழருக்கு தலைமேலியே திரும்பிப் போ" "இந்தி ஆதிக்கம் ஒழிக" என்ற ஒலிகளுடன் கருப்புக் கொடியைக் காட்டினர்.

அவர் நகரசபைக்குச் செல்லும் போது, வாயிலில், தோழர் ஏ. பெருமாள் எம்.சி. அவர்கள், 'இந்தி வெறியரே, திரும்பிப் போ' என்று முழக்கமிட்டார்.

நகரசபையில் அவருக்கு நகர சபைத் தலைவர் தமிழில் வரவேற்பு இதழ் வாசித்துக் கொடுத்தார்.

வரவேற்புக்கு, மல்லங்கர் உடனிருந்தபடியே ஆங்கிலத்தில் பதில் சொல்ல ஆரம்பித்ததும், டாக்டர் கே. கோபால் அவர்கள் எழுந்து, 'தயவு செய்து தமிழில் பேசுங்கள்,' என்று சொன்னார்.

அதற்கு மல்லங்கர், 'எனக்கு தமிழ் தெரியாது,' என்று சொன்ன உடன் டாக்டர் கோபால் அவர்கள் எழுந்து, 'தமிழ் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அச்சபையில், அவர்களுடைய தாய்மொழியாகிய தமிழில் பேசும் பொழுது, இந்தியில் பேசும்படி தாங்கள் சொன்னது ஏன்?' என்று ஆங்கிலத்தில் கேட்டுவிட்டு, 'இனி தமிழ் நாட்டுக்கு வரும்போது தமிழ் கற்றுக்கொண்டு வாருங்கள்,' என்று சொன்னதுடன், 'தாங்கள் இப்போது தமிழில் பேசாததால் அதைக் கண்டிக்கும் முறையில் இக்கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்கிறேன்,' என்று சொல்லி வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து பி. கே. வரதராசலு எம். சி, அவர்களும், மற்றும் பலரும் வெளியேறினார்.

பிறகு மல்லங்கர் தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசுகையில், பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து தமிழர்கள் வடக்கேயுள்ள பத்திரிநாராயணர் கோவிலுக்கு வந்து கொண்டிருந்தபோது, சமஸ்கிருத மொழியைக் கற்றுக்கொண்டு அதையே பேசிக்கொண்டுதான் வந்தார்கள் என்றும், அந்த சமஸ்கிருத மொழியின் வழிவந்தது தான் இந்தி மொழி என்றும், தேசிய மொழி இந்திதான் என்றும், இனி ஆங்கிலத்திற்கு இடமில்லை என்றும், இந்தியை தமிழர்கள் வெறுப்பது குறித்து, தான் வருந்துவதாகவும் சொன்னார். (ந. நி.)

★

சேலம் தி. மு. க. கூட்டம்

29—5—55 மாலை 6½ மணிக்கு சேலம் கொமாரசாமிபட்டியில் 1-வது வட்ட தி மு க சார்பில் நகரக் கழக செயலாளர் தோழர் ஈ ஆர். கிருஷ்ணன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் வடநாட்டு இந்தி வெறியர்களின் போக்கைப் பற்றியும், காலையில் மால்லங்கருக்கு கருப்புக்கொடி காட்டியது பற்றியும் பேசினார். தோழர்கள் எஸ். ஏ. அன்புக்கரசு, சிற்றினி சுப்பிரமணியம் பேசிய பின், இறுதியாக தோழர் என். வி. நடராசன் அவர்கள் தற்கால அரசியல் நிலை குறித்தும், நாடு பிரிய வேண்டியதைப் பற்றியும், காங்கிரஸ் போக்கு பற்றியும் விரிவுரையாற்றினார்.

ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் 17 லட்சம் கிலோவாட் ஆக இருந்த மின்சார உற்பத்தி சக்தி, திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் 25 லட்சம் கிலோவாட் ஆக அதிகரித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம் ஏ.